மேல்விஷாரம் நகராட்சி.
நாள்.05.04.2022.

<u>சாதாரணக் கூட்டம்</u>

மேல்விஷாரம் நகராட்சியில் சாதாரணக்கூட்டம் நகராட்சி அலுவலகத்தில் நகரமன்றத்தலைவர் அவர்களின் தலைமையில் 11.04.2022ந் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெற உள்ளது.

05/04/202

நகரமன்றத்தலைவர்,
மேல்விஷாரம் நகராட்சி.

பொருள்.

1. நகராட்சி ஆணையாளர் அவர்களின் மார்ச் 2022ம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகின்றது.
அலுவலகக்குறிப்பு.
மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.0013/2017/சி1)

2. நகராட்சி பொறியாளர் அவர்களின் பிப்ரவரி 2022 மற்றும் மார்ச் 2022 ஆகிய மாதங்களின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகின்றது.
அலுவலகக்குறிப்பு.
மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.0013/2017/சி1)

3. இந்நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையங்கள், நீர்உறிஞ்சு கிணறுகள் மற்றும் உறைக்கிணறுகள் ஆகியவைகளில் உள்ள குடிநீரின் ஸ்திர தன்மையை பரிசோதணை செய்ய ஆண்டு செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.
அலுவலகக்குறிப்பு.
1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.2022-2023ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3.பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தலைவர் அவர்கள் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.0117/2022/இ1)

4. மேல்விஷாரம் நகராட்சிக்கு சொந்தமான பாலாற்றில் உள்ள உறைக்கிணறு எண்.09,10,11 மற்றும் 12 ஆகியவைகளுக்கு நீர்வரத்து சோதணை செய்தல் பணிக்கு தோராய செலவினம் ரூ.50,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.
அலுவலகக்குறிப்பு.
1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.2022-2023ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3.பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தலைவர் அவர்கள் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.0117/2022/இ1)

5. இந்நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் எண்.TN-73-E-8838க்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு தோராய செலவினம் ரூ.50,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.
அலுவலகக்குறிப்பு.
1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.2021-2022ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தலைவர் அவர்கள் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.115/2022/இ1.)

6. இந்நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் எண்.TN-73-E-8838க்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு தோராய செலவினம் ரூ.50,000/-க்கு பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தலைவர் அவர்கள் முன்னனுமதி வழங்கப்பட்டதன் பேரில் 17.03.2022ந் தேதியன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

வ. எண்.	விபரம்	Sri Maruti Automobiles, NSS Nagar, Perumugai	Sri Vighneshwara Auto works, Vellore-09
1.	வாகனம் எண்.TN-73-E-8838க்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுல்	ரூ.46,300/-	ரூ.49,000/-

அலுவலகக்குறிப்பு.
1.மேற்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள Sri Maruti Automobiles, 13, NSS Nagar, Perumugai, Vellore-09 என்பவரின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தலைவர் அவர்கள் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.115/2022/இ1)

7. இந்நகராட்சியின் 2022-2023ம் ஆண்டின் திருத்திய வரவு-செலவு நிதிநிலை அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகின்றது.
அலுவலகக்குறிப்பு.
மன்றம் பதிவு செய்யலாம்.

8. தமிழக நகர்புற உள்ளாட்சி சாதாரண தேர்தல் 2022 நடைபெற்றதை முன்னிட்டு நகராட்சி அலுவலக கட்டிடத்திற்கு சார்மினா பந்தல், மேஜைகள் மற்றும் நாற்காலிகள் சப்ளை செய்த பணிக்கு செலவினம் ரூ.1,12,520/- மேற்கொண்டதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகின்றது.
அலுவலகக்குறிப்பு.
மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.1018/2018/சி1)

9. தமிழக நகர்புற உள்ளாட்சி சாதாரண தேர்தல் 2022 நடைபெற்றதை முன்னிட்டு வாக்குசாவடி மையங்களுக்கு குடிநீர் வசதி மற்றும் மின்சார வசதி ஏற்படுத்துதல் பணிக்கு செலவினம் ரூ.1,66,960/- மேற்கொண்டதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகின்றது.
அலுவலகக்குறிப்பு.
மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.1018/2018/சி1)

10. தமிழக நகர்புற உள்ளாட்சி சாதாரண தேர்தல் 2022 நடைபெற்றதை முன்னிட்டு புதிய நகராட்சி அலுவவலக கட்டிடத்தில் வாக்கு எண்ணும் இயந்திரங்களுக்கான பாதுகாப்பு அறை தயார் செய்யும் பணிக்கு செலவினம் ரூ.1,25,645/- மேற்கொண்டதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகின்றது.
அலுவலகக்குறிப்பு.
மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.1018/2018/சி1)

11. தமிழக நகர்புற உள்ளாட்சி சாதாரண தேர்தல் 2022 நடைபெற்றதை முன்னிட்டு வாலாஜாபேட்டை நகரத்தில் அமைந்துள்ள அறிஞர் அண்ணா அரசினர் கலைக்கல்லூரியில் வாக்கு எண்ணும் பணி நடைபெற்றது. அதன் பொருட்டு வாக்கு எண்ணும் மையங்களுக்கு அனைத்து வசதிகளும் மேற்கொள்ளும் பணிக்கு செலவினம் ரூ.9,90,961/- மேற்கொண்டதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகின்றது.
அலுவலகக்குறிப்பு.
மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.1018/2018/சி1)

12. இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவில் இயங்கி வரும் Battery Operated Vehicle-களை பழுதுநீக்கம் செய்யும் பணிக்கு ஆண்டு பராமரிப்பு செலவினம் ரூ.6.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.
அலுவலகக்குறிப்பு.
1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.2022-2023ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.0115/2022/இ1)

13. தமிழக நகர்புற உள்ளாட்சி சாதாரண தேர்தல் 2022 நடைபெற்றதை முன்னிட்டு இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள அனைத்து வாக்குசாவடி மையங்களுக்கும் சார்மினா பந்தல் மற்றும் இதர வசதிகள் ஏற்படுத்தும் பணிக்கு செலவினம் ரூ.9,37,765/- மேற்கொண்டதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகின்றது.
அலுவலகக்குறிப்பு.
மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.1018/2018/சி1)

14. தமிழக நகர்புற உள்ளாட்சி சாதாரண தேர்தல் 2022 நடைபெற்றதை முன்னிட்டு தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு நாற்காலிகள் மற்றும் பீரோ சப்ளை செய்தமைக்கு செலவினம் ரூ.41,800/- மேற்கொண்டதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகின்றது.
அலுவலகக்குறிப்பு.
மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.1018/2018/சி1)

15. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செம்மையாக செயல்படுத்த வேண்டியும், மக்கும் குப்பை மக்காத குப்பைகள் என தரம் பிரித்து வழங்க வேண்டியும், கால்வாய் மண்களை அப்புறப்படுத்திடும் பணிகள் மாவட்ட ஆட்சியரின் வழிகாட்டுதல் விலை விகிதபடி 48 தூய்மை பணியாளர்களை கொண்டு ஒப்பந்த அடிப்படையிலும் 18 வார்டுகளில் பணிநடைபெற்று வருகின்றன. மேற்கண்ட பணிக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட பணி உத்தரவு 31.03.2022-ம் தேதியன்று முடிவடைகிறது.
மேற்படி பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் 02/10/2021ந் தேதிய சுற்றிக்கையில் தெரிவித்துள்ள அளவுகோளின்படி வெளிக்கொணர்வு முகாமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் தூய்மை பணியாளர்களை சேர்க்க இருப்பதால் மேற்படி பொதுசுகாதார பணியின் அவசியத்தை கருதி 01.04.2022 முதல் 30.06.2022 வரை 3 மாதகாலத்திற்கு ஏற்கனவே இறுதி செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் திருவாளர். அருணை கம்ப்யூட்டர் பார்ம்ஸ் வாணியம்பாடி, அவர்களின் மூலம் அதே ஒப்பந்தபுள்ளி விகிதத்தில் பணிசெய்ய நீடித்துக்கொள்ளவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.19.00/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு:
1.மன்றம்அனுமதிக்கலாம்.
2.2022-2023ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் .
(ந.க.எண்: 1149/2016/எச்1)

16. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செம்மையாக செயல்படுத்த வேண்டியும், மக்கும் குப்பை மக்காத குப்பைகள் என தரம் பிரித்து வழங்க வேண்டியும், கால்வாய் மண்களை அப்புறப்படுத்திடும் பணிகள் மாவட்ட ஆட்சியரின் வழிகாட்டுதல் விலை விகிதபடி 34 தூய்மை பணியாளர்களை கொண்டு ஒப்பந்த அடிப்படையிலும் 18 வார்டுகளில் பணிநடைபெற்று வருகின்றன. மேற்கண்ட பணிக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட பணி உத்தரவு 31.03.2022-ம் தேதியன்று முடிவடைகிறது.
மேற்படி பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் 02/10/2021ந் தேதிய சுற்றிக்கையில் தெரிவித்துள்ள அளவுகோளின்படி வெளிக்கொணர்வு முகாமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் தூய்மை பணியாளர்களை சேர்க்க இருப்பதால் மேற்படி பொதுசுகாதார பணியின் அவசியத்தை கருதி 01.04.2022 முதல் 30.06.2022 வரை 3 மாதகாலத்திற்கு ஏற்கனவே இறுதி செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் திருவாளர். அருணை கம்ப்யூட்டர் பார்ம்ஸ் வாணியம்பாடி, அவர்களின் மூலம் அதே ஒப்பந்தபுள்ளி விகிதத்தில் பணிசெய்ய நீடித்துக்கொள்ளவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.14.00/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.
அலுவலக்குறிப்பு:
1.மன்றம்அனுமதிக்கலாம்.
2.2022-2023ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் .
(ந.க.எண்: 1149/2016/எச்1)

17. நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை-5 அவர்களின் ஒ.மு.எண்.50915/2012/ஜே3, நாள்.31.01.2013ம் தேதியகடிதத்தில் மேல்விஷாரம் நகராட்சிக்கு காலியாக உள்ள 6 ஒட்டுனர்கள் பணியிடங்கள் நிரந்தரபணியிடங்கள் அனுமதிக்கும் வரை மாவட்ட ஆட்சித்தலைவர், இராணிப்பேட்டை அவர்களின் விலைவிகிதாச்சாரத்திற்க்கு மிகாமல் விலைபுள்ளி பெற்று 6 ஒட்டுனர்கள் பணியிடங்களை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்து கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் 02/10/2021ந் தேதிய சுற்றிக்கையில் தெரிவித்துள்ள அளவுகோளின்படி வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் ஓட்டுநர்கள் சேர்க்க இருப்பதால் மேற்படி பொதுசுகாதார பணியின் அவசியத்தை கருதி 01.04.2022 முதல் 30.06.2022 வரை 3 மாதகாலத்திற்கு ஏற்கனவே இறுதி செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் திரு.எம்.இரபிக்அஹமத் அவர்களின் மூலம் அதே ஒப்பந்தபுள்ளி விகிதத்தில் பணிசெய்ய நீடித்துக்கொள்ளவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.3.00/- மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.2022-2023ம்ஆண்டு வரவுசெலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் .

(ந.க.எண்: 448/2016/எச்1)

18. இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவின் கீழ் இயங்கி வரும் டிராக்டர் மற்றும் இலகுரக வாகனம் (tata ace) 3 எண்ணிக்கை ஏற்பட்டுள்ள சிறு சிறு பழுதுகள் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.1.50/-இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.2021-2022ம்ஆண்டு வரவுசெலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் .

(ந.க.எண்: 221/2021/எச்1)

19. இந்நகராட்சி மூலம் ஏற்கனவே 2021-2022 முதல் 2023-2024 வரையிலான மூன்று ஆண்டு காலத்திற்கான மீன் மகசூல் இனத்திற்கு திரு.E.குமரன் என்பவருக்கு குத்தகை விடப்பட்டு நடைமுறையில் உள்ளது. தற்சமயம் வரை ஓராண்டு குத்தகை காலம் முடிவுற்றுள்ளது.

மேலும், தற்போது கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2021-2022ன் கீழ் கீழ்விஷாரம் பகுதியில் உள்ள நல்லதண்ணீர் குளத்தினை மேம்படுத்துதல் பணி நடைபெறவுள்ளதால், மேற்படி மீன் மகசூல் குத்தகை இனத்தினை வருகின்ற 2022-2023-ம் ஆண்டிற்கான ஓராண்டு காலத்தின் குத்தகை உரிமத்தை தற்காலிகமாக நிறுத்தி வைத்திடவும், திட்டப்பணி முடிவுற்றவுடன் மீண்டும் குத்தகை இனத்தினை செயல்படுத்திடவும், அதற்கு பதிலாக விடுப்பட்ட ஓராண்டு குத்தகை காலத்தினை ஈடுசெய்யும் பொருட்டு 2023-2024ம் ஆண்டு முதல் 2024-2025 ஆண்டு வரை குத்தகை இனத்தை நீட்டித்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.

அலுவலகக்குறிப்பு:

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்படி மீன் மகசூல் குத்தகை காலம் 2021-2022 முதல் 2023-2024 வரை அனுமதிக்கப்பட்டதில், திட்டப்பணியினை செயல்படுத்திடும் பொருட்டு 2022-2023-ம் ஆண்டிற்கான ஓராண்டு காலத்தின் குத்தகை உரிமத்தை தற்காலிகமாக நிறுத்தி வைத்திடவும், மீண்டும் 2023-2024ம் ஆண்டு முதல் 2024-2025ம் ஆண்டு வரையிலான காலத்திற்கு, மேற்படி குத்தகைதார்ர் திரு.E.குமரன் மூலம் மீண்டும் குத்தகை இனத்தை நடைமுறைபடுத்திடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

3.பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தலைவர் அவர்கள் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்: 1301/2014/அ1)

20. இந்நகராட்சி சம்மந்தப்பட்ட வழக்குகளை ஏற்று நடத்துவும் அதற்கான வழக்கு கட்டணங்களை செலுத்தவும் ஆண்டு ஒன்றிற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.1.00/-இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக்குறிப்பு:

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.2022-2023ம்ஆண்டு வரவுசெலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்: 1301/2014/அ1)

21. இந்நகராட்சி புதிய அலுவலக கட்டிடத்தில் உள்ள நகரமன்றத்தலைவர் அறைக்கு புதியதாக ஒரு கலர் ப்ரிண்டர் சப்ளை செய்து பொருத்துதல் பணிக்கு தோராய செலவினம் ரூ.20,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.

அலுவலகக்குறிப்பு.

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.2021-2022ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.,

3.பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.115/2021/இ1)

22. இந்நகராட்சி புதிய அலுவலக கட்டிடத்தில் உள்ள நகரமன்றத்தலைவர் அறைக்கு புதியதாக ஒரு கலர் ப்ரிண்டர் சப்ளை செய்து பொருத்துதல் பணிக்கு தோராய செலவினம் ரூ.20,000/-க்கு பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தலைவர் அவர்கள் முன்னனுமதி வழங்கப்பட்டதன் பேரில் 17.03.2022ந் தேதியன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

வ. எண்.	விபரம்	MIDGARD Services, Vellore	NETWARE Computers, Vellore	BRINDHA Agencies, Vellore
1.	நகரமன்றத்தலைவர் அறைக்கு புதியதாக ஒரு கலர் ப்ரிண்டர் சப்ளை செய்து பொருத்துதல்	ரூ.19,200/-	ரூ.19,500/-	ரூ.19,700/-

அலுவலகக்குறிப்பு.

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள MIDGARD Services, 12, First Street, Phase-2, Sathuvachari, Vellore-09 என்பவரின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்கலாம்.

3.பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.115/2021/இ1).

23. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-28 அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.20452/2020/அ3. நாள்.31.03.2021 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-28 அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.7979/2020/LA3. நாள்.30.06.2021ல் 15வது மத்திய நிதிக்குழு மான்யம் 2020-2021ன் கீழ் ஒதுக்கப்பட்ட கட்டி மான்யத்தில் (Tied Grant) கீழ்கண்ட குடிநீர் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.

வ. எண்	பணியின் பெயர்	மதிப்பீடு ரூ.இலட்சத்தில்
1.	நகராட்சிக்கு சொந்தமான நந்தியாலம் தலைமை நீரேற்று நிலையத்திற்கு 140HP Capacity Electrical Panel Board சப்ளை செய்து பொருத்துதல்.	10.00
2.	நகராட்சிக்கு சொந்தமான ஈஸ்வரன் கோவில் தலைமை நீரேற்று நிலையத்திற்கு 110HP Capacity Electrical Panel Board சப்ளை செய்து பொருத்துதல்.	9.00
	மொத்தம்	19.00

அலுவலகக்குறிப்பு.
1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.15வது மத்திய நிதிக்குழு மான்யம் 2020-2021ன் கீழ் ஒதுக்கப்பட்ட கட்டி மான்யத்தில் (Tied Grant) பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3.பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1071/2021/இ1.

24. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.31118/2022/அம்ருத்-2. நாள்.29.03.2022ல் தெரிவித்துள்ளவாறு 15வது மத்திய நிதிக்குழு மான்யம் 2021-2022ன் கீழ் ஒதுக்கப்பட்ட கட்டப்படாத மான்யத்தின்(Un-Tied Grant) கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருவிளக்குகளை LED விளக்குகளாக மாற்றம் செய்யும் பணியினை மதிப்பீடு தொகை ரூ.20.50 இலட்சத்தில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.
அலுவலகக்குறிப்பு.
1.மன்றம் அனுமதிக்கலாம்.
2. 15வது மத்திய நிதிக்குழு மான்யம் 2021-2022ன் கீழ் ஒதுக்கப்பட்ட கட்டப்படாத மான்யத்தில் (Un-Tied Grant) பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1071/2021/இ1.

25. இந்நகராட்சிக்கு சொந்தமான நந்தியாலம் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள மோட்டார் இயந்திரங்கள், பேனல் போர்டு மற்றும் கேபிள்களில் ஏற்படும் பழுதுகளை நீக்கம் செய்யும் பணிக்கு ஆண்டு செலவினமாக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.
அலுவலகக்குறிப்பு.
1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.2022-2023ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.0117/2022/இ1)

26. இந்நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து சிறுமின்விசைபம்புகளிலும் ஏற்படும் பழுதுகளை நீக்கம் செய்யும் பணிக்கு ஆண்டு செலவினமாக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.
அலுவலகக்குறிப்பு.
1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.2022-2023ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.0117/2022/இ1)

27. இந்நகராட்சிக்கு சொந்தமான ஈஸ்வரன் கோவில் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள மோட்டார் இயந்திரங்கள், பேனல் போர்டு மற்றும் கேபிள்களில் ஏற்படும் பழுதுகளை நீக்கம் செய்யும் பணிக்கு ஆண்டு செலவினமாக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.
அலுவலகக்குறிப்பு.
1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.2022-2023ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.0117/2022/இ1)

28. இந்நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பகிர்மான குழாய்களில் ஏற்படும் நீர்கசிவுகளை சரிசெய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.
அலுவலகக்குறிப்பு.
1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.2022-2023ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.0117/2022/இ1)

29. இந்நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருவிளக்கு பராமரிப்பிற்காக மின்உதிரி பொருட்கள் சப்ளை செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.7.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.
அலுவலகக்குறிப்பு.
1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.2022-2023ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.0117/2022/இ1)

30. இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவில் இயங்கி வரும் Battery Operated Vehicle-களுக்கு 7 பேட்டரிகள் சப்ளை செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.4.20 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.
அலுவலகக்குறிப்பு.
1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.2022-2023ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.0115/2022/இ1)

31. இராணிபேட்டை மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பெருந்தலைவரின் செயல்முறைகள் ந.க.எண்.அ4/2622/2021. நாள்.28.03.2022ல் தெரிவித்துள்ளவாறு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2021-2022ன் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகின்றது.

வ. எண்	பணியின் பெயர்	மதிப்பீடு தொகை ரூ.இலட்சத்தில்
1.	மேல்விஷாரம் நகராட்சி அண்ணாசாலை கீழ்விஷாரம் குளத்துமேடு பேருந்து நிறுத்தத்தில் புதியதாக பயனிகள் நிழற்கூடம் அமைத்தல் பணி.	6.00
2.	மேல்விஷாரம் நகராட்சி அண்ணாசாலை கத்தியவாடி பேருந்து நிறுத்தத்தில் புதியதாக பயனிகள் நிழற்கூடம் அமைத்தல் பணி.	6.00
3.	மேல்விஷாரம் நகராட்சி வார்டு எண்.18, சௌக்கார் நகர் குறுக்கு சந்து தெருவில் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் பணி.	2.50
4.	மேல்விஷாரம் நகராட்சி வார்டு எண்.18, சௌக்கார் நகர் அப்துல் காதர் சாஹிப் தெருவில் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் பணி.	8.00
5.	மேல்விஷாரம் நகராட்சி வார்டு எண்.18, சௌக்கார் நகர் அப்துல் ரஷீத் சாஹிப் தெருவில் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் பணி.	4.00
6.	மேல்விஷாரம் நகராட்சி வார்டு எண்.18, சௌக்கார் நகர் ஜபார் அஹமது சாஹிப் தெருவில் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல்.	4.00
7.	மேல்விஷாரம் நகராட்சி வார்டு எண்.18, பழைய EB அலுவலகம் தெருவில் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் பணி.	4.00
8.	மேல்விஷாரம் நகராட்சி வார்டு எண்.21 இஷாக்பேட்டை 1வது தெருவில் பேவர் ப்ளாக் (Paver Block) சாலை அமைத்தல் பணி.	10.00
9.	மேல்விஷாரம் நகராட்சி புரான்சாமேடு பகுதியில் புதிய அங்கன்வாடி கட்டிடம் கட்டுதல் பணி.	10.00
	மொத்தம்	**54.50**

அலுவலகக்குறிப்பு.
மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.0110/2022/இ1)

32. மேல்விஷாரம் நகராட்சி பழைய அலுவலக கட்டிடத்தில் உள்ள கழிவுநீர் தொட்டி(SEPTIC TANK) சுத்தம் செய்யும் பணிக்கு தோராய செலவினம் ரூ.10,000/- மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு.
1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தலைவர் அவர்கள் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3.2022-2023ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.234/2022/எச்1)

33. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள பொது மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் தமிழக அரசு இராணிப்பேட்டை மாவட்ட நிர்வாகம் நடத்தும் மாபெறும் வேலை வாய்ப்பு முகாமிற்கு ஆட்டோ ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.10,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு.
1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தலைவர் அவர்கள் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3.2022-2023ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.0115/2022/இ1)

34. இந்நகராட்சிக்கு சொந்தமான பாலாற்றில் உள்ள உறைக்கிணறு மற்றும் நீர்உறிஞ்சு கிணறுகளில் தன்மை மற்றும் அளவீடுகளை களஆய்வு செய்து கணக்கிடும் பணிக்கு தோராய செலவினம் ரூ.50,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.
அலுவலகக்குறிப்பு.
1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தலைவர் அவர்கள் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3.2022-2023ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.0115/2022/இ1)

35. இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.02, சலீம் நகரில் உள்ள அம்மா உணவகத்தில் உள்ள RO Plant இயந்திரத்தை பழுதுநீக்கம் செய்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு தோராய செலவினத் தொகை ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.
அலுவலகக்குறிப்பு.
1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.2022-2023ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.0115/2022/இ1)

36. இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய அலுவலக கட்டிடத்தில் உள்ள RO Plant இயந்திரத்தை பழுதுநீக்கம் செய்தல் பணிக்கு தோராய செலவினத் தொகை ரூ.0.20 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.
அலுவலகக்குறிப்பு.
1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.2022-2023ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.0115/2022/இ1)

37. இந்நகராட்சி ஆணையாளருக்கு புதியதாக ஒரு பீரோ, ஒரு நாற்காலி மற்றும் இதர பொருட்கள் சப்ளை செய்யும் செய்யும் பணிக்கு தோராய செலவினம் ரூ.0.25 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.
அலுவலகக்குறிப்பு.
1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.2022-2023ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.0115/2022/இ1)

38. இந்நகராட்சி புதிய அலுவலக கட்டிடத்தில் உள்ள குளிர்சாதன இயந்திரங்களை பழுதுநீக்கம் செய்யும் பணிக்கு தோராய செலவினம் ரூ.0.25 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.
அலுவலகக்குறிப்பு.
1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.2022-2023ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.0115/2022/இ1)

39. தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.

15-ஆவது மத்திய நிதிக்கு ஆணையம், 2022-2023-ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிபில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e. Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி /காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.

அரசாணை(நிலை) எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை (நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்:26.07.2018 ஆகியவற்றில் சொத்து வரி/காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை(நிலை) எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.11.2019-ன் படி சொத்து வரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்து வரி/காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்து வரி/காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்து வரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பொருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும், நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15வது மத்திய நிதிக்குழுவின்மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்து வரி /காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022-2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்து வரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டட்டங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டிடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரிந்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்து வரி /காலிமனைவரி சீராய்வு செய்ய வேண்டும்.

சொத்து வரி /காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிர்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

சொத்துவரி:

குடியிருப்பு கட்டிடங்கள் (Residential Building) :

பரப்பளவு (ச.அடி)	உயர்வு செய்வதற்கானகாரணி
< = 600	1.25
601 - 1200	1.5
1201-1800	1.75
>1800	2

குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள் (Non-Residential Building):

வகைப்பாடு	**உயர்வு செய்வதற்கானகாரணி**
தொழிற்சாலைகள்	1.75
வணிக பயன்பாட்டு கட்டிடங்கள்	2
சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள்	1.75

மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.

1. 600 **சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு** 25% **சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.**
2. 601 **முதல்** 1200 **சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு** 50% **சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.**
3. 1201 **முதல்** 1800 **சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு** 75% **சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.**
4. 1800 **சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு** 100% **சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.**
5. **வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில்** 100% **சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.**
6. **தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில்** 75% **சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.**

காலிமனை வரி சீராய்வு:

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்துவரி விதிப்பு செய்யும் போது கட்டிடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டுதோறும் 6% **உயர்வு அல்லது கடந்த** 5 **ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின்** (GSDP) **சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி /காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.**

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்களும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும் மேல்விஷாரம் நகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு கடன் தொகை /நிதித்தேவை உள்ளது.

வ.எண்.	செலவின வகைப்பாடு	தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் நிதி (Current Liabiliites) (ரூ.கோடியில்)
1	செலுத்தப்பட வேண்டிய நிலுவை	0.78
2	பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை விபரம்	0.86 (TWAD)
3	திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவை விபரம் (டுபிட்கோ,டுபிசெல்,பிற)	23.42
4	பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஒய்வுக்கால பணப்பயன், ஒய்வூதியம் மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநல நிதி, நகராட்சியின் பங்குத்தொகை மற்றும் பிற பணப்பயன்கள் (நிலுவைத் தொகை)	0.07
	மொத்தம்	25.13

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படு கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற தறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 81-A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், மேல்விஷாரம் நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

1. 600 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
2. 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
3. 1201 முதல் 1800 சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
4. 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
5. வணிகப் பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்,
6. தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
7. காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.
8. ஏற்கனவே உள்ள சொத்துவரி/காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6% உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் தொத்துவரி/காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

மேலும் தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்ட சாலைகள்/தெருக்கள்/சந்துகள் அகியவற்றை இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

மேல்விஷாரம் நகராட்சியில் சொத்துவரி உயர்வு சீராய்வு கீழ்கண்டவாறு மதிப்பிடப்பட்டுள்ளது.

வ.எண்	தற்போதைய மண்டலம்	மண்டல மதிப்பு	புதியதாக நிர்ணயிக்கப்படும் மண்டல மதிப்பு		
			பரப்பளவு சதுர அடி	உயர்வு செய்வதற்கான காரணி	புதிய மண்டல மதிப்பு (ரூ)(Col.3X Col.5)
1	2	3	4	5	6
1	A	குடியிருப்பு			
		0.70	600 ச.அ வரை	1.25	0.88
		0.70	601 - 1200	1.50	1.05
		0.70	1201 - 1800	1.75	1.23
		0.70	1801 க்கு மேல்	2.00	1.40
		குடியிருப்பல்லாதவை			
		0.70	கல்வி நிறுவனம்	1.75	1.23
		0.70	தொழிற்சாலை	1.75	1.23
		0.70	வணிகம்	2.00	1.40
2	B	குடியிருப்பு			
		0.50	600 ச.அ வரை	1.25	0.63
		0.50	601 - 1200	1.50	0.75
		0.50	1201 - 1800	1.75	0.88
		0.50	1801 க்கு மேல்	2.00	1.00
		குடியிருப்பல்லாதவை			
		0.50	கல்வி நிறுவனம்	1.75	0.88
		0.50	தொழிற்சாலை	1.75	0.88
		0.50	வணிகம்	2.00	1.00
3	C	குடியிருப்பு			
		0.30	600 ச.அ வரை	1.25	0.38
		0.30	601 - 1200	1.50	0.45
		0.30	1201 - 1800	1.75	0.53
		0.30	1801 க்கு மேல்	2.00	0.60
		குடியிருப்பல்லாதவை			
		0.30	கல்வி நிறுவனம்	1.75	0.53
		0.30	தொழிற்சாலை	1.75	0.53
		0.30	வணிகம்	2.00	0.60

அலுவலக்குறிப்பு:-

1.**அரசாணை எண்**.G.O.(Ms) No.52 **தேதி** : 30.03.2022 **மன்ற பதிவு செய்யலாம்,**

2.**அரசாணையின் படி** 01.04.2022**ந் தேதி முதல் சொத்துவரி சீராய்வு செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.**

(**ந.க.எண்**.630/2018/**அ**1)

05/04/2022

நகரமன்றத்தலைவர்,
மேல்விஷாரம் நகராட்சி.